International Journal for Multidisciplinary Research (IJFMR)
E-ISSN: 2582-2160 ● Website: www.ijfmr.com ● Email: editor@ijfmr.com

# திருப்பாட்டு கூறும் பண்கள்

**Mrs. R. Rama[1], Dr. T. Balchander[2]**

[1]Assistant Professor, PhD Research Scholar (Part-Time), Department of Music, Annamalai University
[2]Assistant Professor, Annamalai University

**ஆய்வுச் சுருக்கம்**

சுந்தரர் தேவாரத்தின் தமிழ் சிறப்பு முறை சுந்தரரின் தமிழ் புலமையை 'மிஞ்சு தமிழ்' என்பார்கள். தமிழ்மொழியானது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாய் வளர்ந்து கன்னித்தமிழாய், செந்தமிழாய், தனித்தியங்கும் பைந்தமிழாய் வளம் வரும் மொழியாகும். தமிழ் மொழி வண்டமிழாய், காலத்தால் அழியாத கன்னி தமிழாய் இளமையுடன் திகழக்கூடியது. வலிமையுடையது செழுமையுடைய மொழி தமிழ் வளர்ந்தோங்கும். பிறமொழி கலப்பில்லாமல் மொழியாகும். தமிழ் இலக்கியம் ஒவ்வொரு இலக்கை குறிக்கோளை மக்களிடையே விதைத்து பண்பட்ட மனிதர்களாய் வாழ வழிவகுத்தது. சுந்தரரும் அவரின் ‘மிஞ்சு தமிழ் மூலம் சிவபெருமானின் மீது கொண்ட மிகுந்த பக்தியால் இவர் இயற்றிய ஏழாம் திருமுறை ஏழேழு தலைமுறையும் படித்து அன்றைய காலகட்டத்தில் நடந்த நிகழ்வை அறியும்படி செய்துள்ளார். இதன் வழியே இவரின் தமிழ் புலமையையும் வெளிப்படுகிறது. இவர் சென்ற கோவில்களில் நமக்கு 100 பதிகங்களே கிடைத்துள்ளன. இந்த ஒவ்வொரு சிவதலம் பற்றிய வரலாறு அறிந்து அந்த ஊரின் சிறப்பு அறிந்து ஒவ்வொரு ஊருக்கும் நெடுந்தூரப் பயணம் மேற்கொண்டு சற்றும் சலிப்பில்லாமல் இவர் பாடிய கவிதைவரிகள் இவர் சிவபெருமான் மீது கொண்ட பக்தி மட்டுமின்றி தமிழ்மொழி மீது கொண்ட அன்பும் விளங்கும். இவரின் பதிகங்களை படிக்கும் ஏழேழு தலைமுறையும் தமிழ் மொழியை வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் இயற்றியுள்ளார். இவர் சிவபெருமானை பற்றி பாடும்போது அவரை பற்றிய ஆடை, அணிகலன்களுக்கு ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு விதமான தமிழ் சொல்லைகொண்டு பயன்படுத்தியுள்ளார். இது போன்று ஒரு பொருளையுடைய பல சொற்களின்பயன்பாடு, இவர் தமிழ்ப் புலமைக்கு ஒரு சான்று. இவரின் ஒவ்வொரு பாடலும்பண்சுமந்த தனித்துவம் பெற்றுள்ளது. இவரின் பாடலில் சிவபெருமானை மட்டும் பற்றிப்பாடாமல் நடனத்திற்கு தேவைப்படும் பெரும்பாலான செய்தியை இவரின் பாடலில் வெளிப்படுத்தி

உள்ளார். இன்றைய கர்நாடக இசைக்கு அடிப்படை தாய் தமிழே.பண்ணொடு தமிழொப்பாய்' என்னும் தேவாரப் பண்ணிசை வகுத்தனர். இதற்கு ஒரு சான்றாக சுந்தரர் தேவாரமும் பண்சுமந்து திகழ்கிறது. சுந்தரர் அவர் கவிதை வரிகளில் பயன்படுத்திய வெவ்வேறான தமிழ் சொற்களினை பயன்படுத்தியுள்ளனர். கங்கை, பிறை, சடை, திருமேனி, ஆடல், முக்கண், குழை, நீலகண்டம் புலித்தோல் உடை, யானை உரி, பல கருவியேந்திய பல கைகளின் வருணனை போன்றவற்றை பல சொற்களை பயன்படுத்தி ஒரு பொருளுணர்த்த படைத்துள்ளார்.

**முன்னுரை:**

சுந்தரர் பாடிய பாடல்கள் திருப்பாட்டு எனப்படுகிறது. மூவர் தேவாரத்தில் சிறப்பு மிக்க தேவாரமாக சுந்தரர் தேவாரமும் திகழ்கிறது. இவரின் திருப்பாட்டை பண் சுமந்த பாடல் என்றும் அழைக்கின்றனர். பண்கள் மொத்தம் 103 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"பண்ணோர் பதினேழாம் பண்ணியில் பத்தேழாம்
எண்ணுந் திறமிரண்டும் பத்தென்ப - நண்ணிய
நாலாந் திறத்திறமோர் நான்கு உளப்படப் பாலாய பண்ணூற்று மூன்று"

பெரும்பண்கள் 17 + பண்ணியல் 70 + திறம் 12 + திறத்திறம் 4 = 103 பண்கள் என பஞ்சமரபு பக்கம் 154இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுந்தரர் அதில் 17 பண்களை பயன்படுத்தியுள்ளார். தேவாரம் பாடிய ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் செந்துருத்தி பண் பயன்படுத்தியதாக தெரியவில்லை. சுந்தரர் சிறப்புமிக்க பண்ணான செந்துருத்தி பண்ணை பயன்படுத்தியுள்ளார். சுந்தரர் பயன்படுத்திய ஒவ்வொரு பண்ணுக்கும் தனிச்சிறப்பு உள்ளது. இந்த பண்களை பயன்படுத்தினாலோ, கேட்பதாலோ வாழ்க்கை மேன்மையடையும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

திருப்பாட்டில் இறைவனை துதித்து போற்றி மட்டும் பாடாமல் இசைக்கருவிகளை பற்றியும் புகழ்ந்துள்ளார். இன்றைய காலக்கட்டத்தில் நாம் அறியாத இசைக் கருவிகள் கூட அவர் வாழ்ந்த காலத்தில் பயன்பாட்டில் இருந்துள்ளதை குறிப்பிட்டு இருக்கிறார். இசைக் கருவிகள் வழிபாட்டிலும், ஆடல்மகளிர் வழிபாட்டு நடனத்திலும், சிவனார் தாண்டவத்திலும் கருவிகள்

இசைத்து ஆடுகிறார் என்பதை சுந்தரர் திருப்பாட்டில் விளக்கியுள்ளார். இசைக்கருவிகள் ஆட்டக்காரர்களால் கொட்டி பயன்படுத்தி ஆடும் நடனங்கள் செவ்வியல் மரபில் இல்லை. மாறாக, நாட்டிய தர்மியில் முத்திரை பயன்பாட்டால் வெளிப்படுத்தும் மரபு உள்ளது. இருந்தாலும் கிராமிய நடனத்தில் இன்றும் துடிக்கூத்து, பறையாட்டம், கோலடித்து ஆடுதல் கோவில் திருவிழாக்களில் ஆடப்படும் சிறப்பு இசைக்கருவி நடனமாக விளங்குகிறது. திருப்பாட்டில் குறிப்பிட்டுள்ள இசைக் கருவிகளின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. நடன மங்கையாக சுந்தரரின் தேவாரத்தை படிக்கும்போது நான்கு வகையான அபிநயங்களான ஆங்கிக, வாசிக, ஆஹாரிய, சாத்விக அபிநயங்களோடு ஒப்பிடும் போது இவ்வியல் வாசிக அபிநயத்தோடு பொருந்துகிறது. திருப்பாட்டில் கூறும் பண், கருவி, இசை, ஆடலுக்கான இசை என்ற இப்பாடானது ஆடல்மங்கைக்கோ, ஆடல் இயக்கி அமைப்பவர்க்கோ தேவைப்படும் வாய்பாட்டுக்கு உதவும் அழகிய கவிதை வரிகளும், நடன நிகழ்வை மேலும் விறுவிறுப்பாக்கும் இசைக்கருவிகளைப் பற்றி சுந்தரர் தனது திருப்பாட்டில் வெளிப்படுத்தியுள்ளார்.

**சுந்தரர் தேவாரத்தில் பண்:**

சுந்தரர் பாடிய தேவாரப் பதிகங்களில் 100 மட்டும் கிடைத்துள்ளன. இவர் பாடிய பாடல்கள் பண் சுமந்த பாடல்கள் எனப்படுகிறது. சுந்தரர் பாடிய தேவார பாடல் பதினேழு பண்களோடு அமைந்துள்ளன. ஒவ்வொரு பண்ணுக்கும் தனிச் சிறப்பும், தனிச் சுவையும் உள்ளது. உலகிலேயே தாளத்தோடும், பண்ணோடும், ஆழ்பொருள் பொதிந்த இசைப்பாடலாய் இருப்பது தேவார பாடல்கள் எனப்படுகிறது.

பண்ணானது இனிமையைத் தருவதும், தனியோசை உடையதாக இருப்பதினாலும் தமிழ்மொழியின் சிறப்பினாலும் இசை வளமாக வளர்ந்து தேவாரத்தில் அழகாக வெளிப்படுகிறது. பண்கள் மொத்தம் 103 என்று குறிப்பிடப்பட்டுள்ளன. தேவாரத்திலும் திருமுறைகளிலும் 24 பண்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பண்களின் இயல்புக்குத் தக்கவாறு தேவாரப் பாடல்கள் பாவமைப்பிலும், சொற்றொடர் இணைப்பிலும், எழுத்தொலிகளின் இசைப்பிலும் மாற்றமடைந்து. உள்ளமையைக் காணலாம். சில பாடல்களின் அடிகள் சீர் குறைந்தும், கூடியும் பல பண்களில் அமைக்கப் பெற்றுள்ளன. இவற்றை சம்பந்தர், சுந்தரர், அப்பர் ஆகியோர் பாடியுள்ளனர்” சுந்தரர், அவரின் தேவாரத்தில் பயன்படுத்திய பண்களில் பதினேழு பண்கள் மட்டுமே

கிடைத்துள்ளன. பதினெழு பண்களின் பெயரும் அவற்றுக்கு சமமான தற்கால இராகங்களும் குறித்து எடுத்தாளப்படுகிறது. தேவாரப் பண்களை மூன்றாக வகைப்படுத்தினர்.

1. பகற்பண்கள்
2. இராப்பண்கள்
3. பொதுப்பண்கள்

சுந்தரர் தனது திருப்பாட்டில் பகற்பண்ணாக பதினொரு பண்களை பயன்படுத்தியுள்ளார். இராப்பண்ணாக ஐந்து பண்களும் பொதுப்பண்களில் ஒன்றையும் பயன்படுத்தியுள்ளார். சுந்தரர் பாடிய பாடல்களை 'திருப்பாட்டு' என்பர். மேலும் இவரின் கவிதை பாவனை 'பக்தி மார்க்கமாக' விளங்குகிறது.

**சுந்தரர் தேவாரத்தில் பாடிய பகற்பண் பாடல்கள்**

**1. இந்தளப் பண் (7.001 முதல் 7.012 வரை உள்ளது):**

இந்தளம் பண்ணுக்கு இணையான ராகம் மாயமாளவகௌளை. சுந்தரரை இறைவன் தடுத்தாட்கொண்டபோது அவர் பாடிய முதல் பண்ணாகும்.

"பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
அத்தா உனக்(கு) ஆளாய்இனி அல்லேன்என லாமே" (7.001.1)

**2. நட்ராகப் பண் (7.017 - 7.030) வரை உள்ளது:**

நட்டராகப் பண்ணுக்கு இணை ராகம் பந்துவராளி. "காமவர்த்தின் கருநாடக இசையின் 51வது மேளகர்த்தா இராகம். இதுவே பந்துவராளி என்று அழைக்கப் படுகின்றது. சம்பூர்ண மேள பத்ததியில் 'காசிராமக்கிரியா' என்றழைக்கப்பட்டதும் இந்துஸ்தானி இசையில் 'பூர்வி தாட்' என்ற பெயரும் காணப்படுகிறது."

"கட்டக்காட் டின்னட மாடுவ (7.018.2)
..........................

**3. பழம்பஞ்சுரப் பண் (7.047 - 7.053 உள்ளது):**

பழம்பஞ்சுரம் பண்ணுக்கு இணை ராகம் சங்கரா பரணம், “சங்கராபரணம் (அல்லது தீரசங்கராபரணம்) கருநாடக இசை முறையில் 29வது மேளகர்த்தா அல்லது ஜனக இராகமாகும். விரிவான ஆலாபானைக்கு இடம் தரும் இராகம் இந்துஸ்தானி இசையில் 'பிலாவல் தாட்’ என்றழைக்கப்படுகிறது. பண்டைய

தமிழிசைப் பண்களில் 'பழம்பஞ்சுரம்' என்னும் பெயருடன் அழைக்கப்படுகிறது"

"முத்தா முத்தி தரவல்ல (7.052.1)

………………

**4. தக்கேசிப் பண் (7.054 - 7.070 வரை உள்ளது);**

தக்கேசி பண் இணை ராகம் 'காம்போதி' "காம்போதி கருநாடக இசையில் மிகப் பிரபலமான ஒரு இராகமாகும். இது 72 மேளகர்த்தா இராகங்களில் 28 அவது மேளமாகிய அரிகாம்போதி இராகத்தின் ஜன்னிய இராகமாகும். பண்டைய தமிழிசைப் பண்களில் தக்கேசி என்னும் பெயருடன் அழைக்கப்படுகிறது"" என்று கூறப்பட்டுள்ளது.

"கரியா னைவரி கொண்டகை யானைக்" (7.059.7)

…………………………

**5. காந்தாரப் பண் (7.071 - 7.078 வரை உள்ளது):**

காந்தாரப் பண் இணை ராகம் 'நவரோஸ்' என்று அழைக்கப்படுகிறது. "யாழைப்பழித் தன்னமொழி (7.071.7)

………………………

**6. பியந்தைப் காந்தாரப் பண் (7.076 உள்ளது):**

பியந்தை காந்தாரம் இணை ராகம் 'நவரோஸ்' என்று அழைக்கப்படுகிறது. "இந்த பண் திருவாஞ்சியம்' என்னும் தளத்தில் (7.076.1 - 7.076.10) வரை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது" என்ற செய்தி தெரியவருகிறது.

"தொறுவில் ஆன்இள ஏறு" (7.076.2)

………………………………

**7. காந்தார பஞ்சமம் பண்**

காந்தார பஞ்சமப் பண்ணுக்கு இணை ராகம் 'கேதார கௌளை' என்று அழைக்கப்படுகிறது

**8. நட்டபாடை பண் (7.078 - 7.082 வரை உள்ளது):**

நட்டபாடை பண்ணுக்கு இணை ராகம் 'நாட்டை', "நமது இசையில் பல நாட்டை இராகங்கள் காணப்படுகின்றன. அவற்றில் நாட்டை, சலநாட்ட, சுத்த நாட்ட, மோகன் நாட்ட ஆஹிரி நாட்ட முதலியவற்றைக் கூறலாம். முதன் முறையாக தோன்றியிருக்கக் கூடிய ஔடவ ராகம் இதுவாகும். இதுவே கம்பீர நாட்டையாகவும், பண்டைய தமிழிசைப் பண்ணில் நாட்டபடை என்ற பண்ணாகவும் பொலிவுற்று விளங்கியுள்ளது" என்பது தெரிய வருகிறது.

"மலையான்மகள் மடமாதிட (7.082.4)

**9. புறநீர்மை பண் (7.83 - 7.085 உள்ளது):**

புறநீர்மை பண்ணுக்கு இணை ராகம் பூபாளம். "பூபாளம் இராகம் கருநாடக இசையில் பயன்படும் இராகங்களில் ஒன்றாகும். இது 8 ஆவது மேளகர்த்தா இராகமாகும். 'நேத்ர' என்றழைக்கப்படும் 2 ஆவது சக்கரத்தின் 2 ஆவது மேளமாகிய தோடியின் ன்னிய இராகம் ஆகும். மிகப் பழமையான, மங்களகரமான இராகமாகும்."

"ஊர்தொரும் வெண்மலை கொண் (7.085.3)

**10. கௌசிகம் பண் (7.094) வரை உள்ளது:**

கௌசிகம் பண்ணுக்கு இணை ராகம் 'பைரவி' "இந்த பண் (7.094.1) வரை மட்டுமே பயன்படுத்தியுள்ளனர். பைரவி 20 ஆவது மேளகர்த்தா இராகமாகிய "வேத என்றழைக்கப்படும். 42ஆவது சக்கரத்தின் 2 ஆவது மேளமாகிய நடபைரவியின் ஜன்னிய இராகம் ஆகும். இது ஒரு பழமையான இராகம், பண்டைய தமிழிசைப் பண்களில் 'கௌசிகம்' என்னும் பெயருடன் அழைக்கப்படுகிறது" என்று இணையச் செய்தி தெரிவிக்கிறது.

"அழல்நீர் ஒழுகி யனைய சடையும் (7.094.)

**11. பஞ்சமம் (7.096 - 7100 வரை உள்ளது).**

பஞ்சமம் பண்ணுக்கு இணை ராகம் 'ஆகிரி'. "ஆகிரி இராகம் கருநாடக இசையில் பயன்படும் இராகங்களில் ஒன்றாகும். இது 14 ஆவது மேளகர்த்தா இராகமாகிய அக்னி என்றழைக்கப்படும் 3 ஆவது சக்கரத்தின் 2 அவது மேளமாகிய வகுளாபரணத்தில் பிறக்கும் ஜன்னிய இராகம். இந்த இராகம் ஆரோகண – வக்ர சம்பூர்ண இராகமாகும்

'நாமாறா துன்னையே நல்லன சொல்லுவார் (7.096.3)

இந்த பண்கள் அனைத்தும் சுந்தரர் திருப்பாட்டில் பல சிவபெருமானின் கோவில்களில் சிவபெருமானை போற்றி துதித்துப் பகலில் பாடிய பண்களாகும்.

**இரவுப் பண்ணுக்குரிய சுந்தரரின் பாடல்கள்:**

**1. சீகாமரம் பண் (7.086 - 7.089 வரை உள்ளது):**

சீகாமரம் பண்ணுக்கு இணை ராகம் 'நாதநாமக்கிரியா'. இது 15 ஆவது மேளகர்த்தா இராகமாகிய 'அக்னி' என்றழைக்கப்படும் 3 ஆவது சக்கரத்தின் 3 ஆவது மேளமாகிய மாயமாளவ கௌளையில் பிறக்கும் ஜன்னிய

இராகமாகும். இந்த இராகம் இசை நாடகங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும்" இப்பண்ணில் அவர் இயற்றிய பாடல்,

"அறையும்பைங் கழலார்ப்ப (7.086.2)

**2. குறிஞ்சி பண் (7.090 - 7.093 வரை உள்ளது).**

குறிஞ்சி பண்ணுக்கு இணை ராகம் 'ஹரிகாம்போதி'. "கருநாடக இசை முறையில் 28 ஆவது மேளகர்த்தா அல்லது ஜனக இராகமாகும். விரிபான ஆலாபனைக்கு இடம் தரும் இராகம். அசம்பூர்ண (ஏழநிறைவேற்ற) மேள பத்ததியில் இந்த இராகத்திற்கு 'அரிக்கேதார கௌளை' என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்துஸ்தானி இசையில் இதற்கு 'கம்ஜ் தாட்' என்பது பெயர்."" கீழ்கண்டப் பாடல்

குறிஞ்சிப் பண்ணில் அமைந்துள்ளது.

"படையார் மழுவன் பால்வெண் ணீற்றன (7:091.6)

.........................................

**3. கொல்லி பண் (7.031 - 7.037 வரை உள்ளது):**

கொல்லி பண்ணுக்கு இணை ராகம் 'நவரோஸ்' எனப்படும். இப்பண்ணில் எழுதிய பாடல் ஏழ பிரிவுகளில் காணப்படுகிறது.

"குரவம் நாறிய குழலி ணார்வளை (7.036.6)

........................................

**4. தக்கராகப் பண் (7.013 - 7.016 வரை உள்ளது):**

தக்கராகம் பண்ணுக்கு இணை 'காம்போதி' "காம்போதி கருநாடக இசையில் மிகப் பிரபலமான ஒரு இராகமாகும். இது 72 ஆவது மேளகர்த்தா இராகங்களில் 28ஆவது மேளமாகிய அரிகாம்போதி இராகத்தின் ஜன்னிய இராகமாகும். பண்டைய தமிழிசைப் பண்களில் தக்கேசி என்னும் பெயருடன் அழைக்கப்படுகிறது" தக்கராகப் பண்ணில் சுந்தரர் நான்கு பிரிவுகளில் நாற்பது பாடல்கள் இயற்றியுள்ளார்.உதாரணமாக,

"நிணம்படு முடலை நிலைமையென் றோரேன் (7.014.8)

.............................................

**5. கொல்லிக் கௌவானம் பண் (7.038 - 7.046 வரை உள்ளது):**

கொல்லிக் கௌவானம் பண்ணுக்கு இணை ராகம் 'சிந்து கன்னடா' என்று அழைக்கப்படுகிறது.

"அரியோடு பூமிசை யானும் (7.044.8)

.............................................

இவை அனைத்தும் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ள இராப்பண்களின் அமைவு பெற்ற பாடல்களும் மற்றும் இணை இராகங்களுமாகும்.

**சுந்தரர் தேவாரத்தில் பயன்படுத்திய சிறப்பான பொதுப் பண்:**

**செந்துருத்திப் பண்:**

சுந்தரர் பாடிய பண்களில் செந்துருத்திப் பண் மிகவும் சிறப்பானதொரு பண்ணாகும். இப்பண்ணை தேவாரம் பாடிய ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் பயன்படுத்தியதாக தெரியவில்லை. இந்த செந்துருத்திப் பண் ஒரு மங்களகரமான பண்ணாகும். அரங்கிசை இறுதியில் இப்பண் இசைக்கும் மரபு இருந்துள்ளது. செந்துருத்திப் பண் 'செந்திறம்' எனவும் அழைக்கப்பட்டுள்ளது. செந்துருத்திப் பண்ணுக்கு அம்சமான இராகம் 22 ஆவது மேளகர்த்தா இராகமாகிய 'வேத' என்றழைக்கப்படும். 4 ஆவது சக்கரத்தின் 4 ஆவது இராகமாகிய கரகரப்பிரியாவின் ஜன்ய இராகமாகும். இது பாட வேண்டிய காலம் நண்பகல் ஆயினும் மிகவும் சுபகரமான இராகமானதால் இதை எப்பொழுதும் பாடலாம்"

இந்த ராகம் இசை நாடகங்களில் உபயோகப்படுத்தப்படும் இராகங்களில் ஒன்று. இந்த இராகத்தை கச்சேரி, பஜனை, காலக்கேஷபம், நாடகம் முதலிய நிகழ்ச்சிகளின் இறுதியில் பாடி முடிக்கும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகின்றது பல்வேறு இரச உணர்ச்சிகள் இந்த பண் மூலம் நமக்கு ஏற்படுகின்றன. செந்துருத்தி பண்ணின் தாட்டுப் பிரயோகங்கள் மிகவும் ரஞ்சகமாக இருக்கும். இப்பண்ணில் அமைந்த திருப்பாடல் உதாரணம்.

"மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே." (7.095.1)

என்ற பாடலை செந்துருத்தி பண்ணில் பாடியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பண்களின் தனிசிறப்பும் நாம் கேட்கும் போதும் அந்த பண்களை பயன்படுத்தும் போதும் வாழ்க்கையில் துன்பங்கள் நீங்கி வாழ்க்கை மேம்படவும் உதவுகிறது. இத்தகைய சிறப்பு மிக்க பண்களை சுந்தரர் தனது திருப்பாட்டில் பயன்படுத்தி நாம் அறியும்படியும் இதனை நாள்தோறும் வழிபாட்டிலும் இசை, ஆடல் நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தும்படியும் செய்துள்ளார்.

**பண்களின் தனிச்சிறப்பு:**

பண் என்பது இசையின் அடிப்படை வடிவங்களில் ஒன்று முறைப்படி இசையொலிகளை வகைப்படுத்தி அவ்வொலிகளால் பல்வேறு இசைப்போக்குகளுடன் உள்ளத்தில் ஒருணர்வு ஓங்க அமைக்கப்படுவது பண். ஒவ்வொரு பண்ணுக்கும் ஒரு தனி சிறப்பு உள்ளது.

**கொல்லி:**

"உணவும், உடையும் குறைவின்றிக் கிடைக்க, குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் தீர்வதற்கும், குடும்பத்தில் உள்ளவர் அனைவரும் அமைதியுடன் வாழ்வதற்கும் கொல்லி பண் பாடப்படுகிறது என்பது தெரியவருகிறது.

**தக்கேசி:**

கண்களில் உள்ள கோளாறு நீங்குவதற்கும் பார்வை இழந்த கண்களில் ஒளியைப் பெறுவதற்கும் தக்கேசி பண் பயன்படும் என்பது செய்தியாக அறியப்படுகிறது.

**செந்துருத்தி:**

வலக்கண் கோளாறு நீங்குவதற்கு பயன்படுத்தவேண்டிய பண் செந்துருத்தி பண்ணாகும் என்று கூறப்படுகிறது.

**இந்தளம்:**

கல்வியில் திறம் பெற்று உயர்வதற்கு இந்தளம் பண் உதவுகிறது என்று கூறுகிறார்கள்.

**குறிஞ்சி:**

தாயாரின் உடல் நிலை சீர்பெறுவதற்கும், நண்பர்களின் தொடர்பு நன்கு அமையப் பெறுவதற்கும் வீடு, மனை முதலிய செம்மையுறக் கட்டி முடிப்பதற்கும் பாடவேண்டிய பண் குறிஞ்சி பண் எனப்படுகிறது.

**சீகாமரம்:**

மக்கட் செல்வம் வாய்க்கப் பெறுவதற்கும், பட்டிமன்றம், கருத்தரங்கம் முதலியவற்றில் வாதத்திறமை பெறுவதற்கும் இந்த பண் உதவுகிறது. மேலும் தொழில் நிரந்தரம் பெற ஓதவேண்டிய பண் சீகாமரமாகும் என்று கூறப்பட்டுள்ளது.

**காந்தாரம்:**

வெப்பம் மிகுதியால் ஏற்படும் சுரநோய் பித்தகரம் முதலிய நோய்கள் நீங்குவதற்கு பயன்படுத்த வேண்டிய பண் காந்தாரம் எனத் தெரியவருகிறது.

**கௌசிகம்:**

பகைவர்களால் ஏற்படும் தொல்லைகளைப் போக்குவதற்கும், சிறை வாசத்தை தடுப்பதற்கும், சிறையிலிருந்து விரைவில் விடுபடுவதற்கும் நாள்தோறும் உணவும் உறக்கமும் சீராகப் பெறுவதற்கும், வீண் செலவுகள் ஏற்படாமல் இருப்பதற்கும், மறு பிறப்பைத் தவிர்ப்பதற்கும். இறைவழிபாட்டில் ஈடுபாடு மிகுவதற்கும் பயன்படும் பண் கௌசிகம் என்று கூறப்பட்டுள்ளது.

**பழம்பஞ்சுரம்:**

கடன் தொல்லைகள் நீங்கி, மன நிம்மதியுடன் வாழ்வதற்கும், பிறரிடமிருந்து கடன் பெறாமலே போதிய பொருளாதாரத்துடன் வாழ்வதற்கும் பழம்பஞ்சுரம் பண் பயன்படுகிறது. என்பது முன்னோர்கள் நம்பிக்கையாக இருந்துள்ளது.

**தக்கராகம்:**

இரத்த அழுத்த நோய், இனிப்பிலி (நீரிழி) நோய் முதலிய நோய்கள் நீங்குவதற்கும், மூர்ச்சை நோயிலிருந்து எழுவதற்கும் உதவுகிறது. இக்காலத்தில் போதைப் பொருளுக்கு அடிமையாகி மீள இயலாமல் இருப்பவர்களை மீட்பதற்கும் இந்த பண் உதவுகிறது என்று அறியப்படுகிறது.

**பியந்தைக் காந்தாரம்:**

சகல கிரக பீடைகள் நீங்குவதற்கும், ஆயுள் பலம் பெருவதற்கும் இந்த பண் பயன்படும் என்று கூறுகிறார்கள்.

**நட்டராகம்:**

இழந்த பொருளை மீட்டுப்பெறுவதற்கு பயன்படுத்தப்படும் பண் நட்டராகம்" எனக் கூறுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பண்களின் தனிச்சிறப்பும் நாம் கேட்கும் போது அந்தப் பண்களை பயன்படுத்தும் போதும் வாழ்க்கையில் துன்பங்கள் நீங்கி வாழ்க்கை மேம்படவும் உதவுகிறது. இத்தகைய சிறப்பு மிக்க பண்களை சுந்தரர் தனது திருப்பாட்டில் பயன்படுத்தி நாம் அறியும்படியும் இதனை

நாள்தோறும் வழிப்பாட்டிலும் இசை, ஆடல் நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தும்படியும் செய்துள்ளார்.

**முடிவுரை:**

சுந்தரர் தேவாரத்தில் பயன்படுத்திய பண்கள் பற்றியும் அவற்றை பாடப்படும் நேரங்கள் பற்றியும் இணையான இராகங்கள் குறித்த செய்திகள் தரப்பட்டுள்ளது. சுந்தரர் தேவாரத்தில் பயன்படுத்தி இருக்கும் ஒவ்வொரு பண்ணுக்கும் தனிச்சிரப்புண்டு அதை கேட்டாலோ, பாடினாலோ நம் வாழ்க்கை மேன்மையடையும். வாழ்வில் துன்பங்கள் விலகி இன்பங்கள் பெறமுடியும். நாம் பார்த்திடாத கேட்டிடாத பல இசைக்கருவிகள் பற்றியும் திருப்பாட்டு கூறுகிறது. தேவாரத்தில் இசைக் கருவிகளை பயன்படுத்தி ஆடவல்லானின் நடனம் மற்றும் ஆடல் மகளிர் கோவில் தொண்டு புரிந்து இசை மற்றும் நாட்டிய கலையை வளர்த்து வந்தார் என்பதை உறுதி செய்யும் விதமாக சுந்தரர் பாடிய பாடல்கலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுந்தரரின் தமிழ் புலமை அவரின் ஒவ்வொரு திருப்பாட்டு மூலம் வெளிப்படுகிறது. சுந்தரர் தமிழின் மீது கொண்டப் பற்றினாலும் இறைவன் மீது கொண்ட பக்தி மிகுதியாலும் இறைவன் பக்தி சுவையும் தமிழ் வலிமையும் பெற்று காலத்தால் அழியாததாக திருப்பாட்டு திகழ்கிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. தமிழ்ப் பாடல்களில் யாப்பு வகைகளும் தாளமும் – ஓர் ஆய்வு ஆய்வாளர் சி. மகேந்திரன், தமிழ்பல்கலைக் கழக முனைவர் பட்ட ஆய்வேடு .
2. சுந்தரர் தேவாரம் – வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம்.
3. பதினொராந் திருமுறை மூலமும் , உரையும் – புலவர் நடராசன் உமா பதிப்பகம், சென்னை.
4. சைவ மரபும் மெய்ப்பொருளியலும் – முனைவர்.பி.ஆர்.நரசிம்மன் விஷ்ணு பதிப்பகம், மதுரை.